# பெப்ரவரி – 07 – வியாழன்

## புனித கொன்ராட்

**“அவர்களுக்குத் தீய ஆவிகள் மீது அதிகாரமும் அளித்தார்” மாற்.6:7**

## முதல் வாசகம் : எபிரேயர் 12 : 18 – 19, 21 – 24

சகோதர, சகோதரிகளே! நீங்கள் வந்து சேர்ந்திருப்பது தொட்டுணரக் கூடிய, தீப்பற்றியெரிகின்ற, இருள்சூழ்ந்த, மந்தாரமான, சுழல்காற்று வீசுகின்ற சீனாய் மலை அல்ல. அங்கு எக்காளம் முழங்கிற்று. பேசும் குரலொன்று கேட்டது. அக்குரலைக் கேட்டவர்கள் அதற்குமேல் தங்களோடு அது ஒரு வார்த்தைகூடப் பேசவேண்டாம் என்று கேட்டுக் கொண்டார்கள். ”நான் அஞ்சி நடுங்குகிறேன்” என்று மோசேயே சொல்லுமளவுக்கு அக்காட்சி அச்சம் விளைவித்தது. ஆனால் நீங்கள் வந்து சேர்ந்திருக்கும் சீயோன் மலை வாழும் கடவுளின் நகர் விண்ணக எருசலேம். அதனைப் பல்லாயிரக் கணக்கான வானதூதர் சூழ்ந்துள்ளனர். விண்ணகத்தில் பெயர் எழுதப்பட்டுள்ள தலைப்பேறானவர்களின் திருச்சபை விழாக் கூட்டமென அங்கே கூடியுள்ளது. நிறைவுபெற்ற நேர்மையாளர்களோடு சேர்ந்து, அனைவருக்கும் நடுவரான கடவுள் முன்னிலையிலும், புதியதோர் உடன்படிக்கையின் இணைப்பாளராகிய இயேசுவின் முன்னிலையிலும் நிற்கிறீர்கள். ஆபேலின் இரத்தத்தைப் போலன்றிச் சிறந்த முறையில் குரலெழுப்பும் இயேசுவின் இரத்தத்தினால் தெளிக்கப் பட்டிருக்கிறீர்கள்.

**பதில்பாடல் :** உமது கோவிலில் ஆண்டவரே உமது பேரன்பை நினைத்து உருகினோம்.

## நற்செய்தி : மாற்கு 6 : 7 - 13

அக்காலத்தில் இயேசு பன்னிருவரையும் தம்மிடம் வரவழைத்து, அவர்களை இருவர் இருவராக அனுப்பத் தொடங்கினார். அவர்களுக்குத் தீய ஆவிகள் மீது அதிகாரமும் அளித்தார். மேலும், ”பயணத்திற்குக் கைத்தடி தவிர உணவு, பை, இடைக்கச்சையில் செப்புக் காசு முதலிய வேறு எதையும் நீங்கள் எடுத்துக் கொண்டு போகவேண்டாம். ஆனால் மிதியடி போட்டுக் கொள்ளலாம் அணிந்திருக்கும் அங்கி ஒன்றே போதும்” என்று அவர்களுக்குக் கட்டளையிட்டார். மலும் அவர், ”நீங்கள் எங்கேயாவது ஒருவீட்டுக்குள் சென்றால், அங்கிருந்து புறப்படும்வரை அவ்வீட்டிலேயே தங்கியிருங்கள். உங்களை எந்த ஊராவது ஏற்றுக் கொள்ளாமலோ உங்களுக்குச் செவி சாய்க்காமலோ போனால் அங்கிருந்து வெளியேறும் பொழுது, உங்கள் கால்களில் படிந்துள்ள தூசியை உதறிவிடுங்கள். இதுவே அவர்களுக்கு எதிரான சான்றாகும்” என்று அவர்களுக்குக் கூறினார். அப்படியே அவர்கள் புறப்பட்டுச் சென்று மக்கள் மனம் மாற வேண்டுமென்று பறைசாற்றினார்கள். பல பேய்களை ஓட்டினார்கள் உடல் நலமற்றோர் பலரை எண்ணெய் பூசிக் குணப்படுத்தினார்கள்.

**தியானம் :** இந்த உலகம் சாத்தானுடைய ஆளுகைக்குள்ளாக இருக்கிறது என்று விவிலியம் நமக்குக் கற்றுக்கொடுக்கின்றது. “உலகனைத்தும் தீயோனின் பிடியில் இருக்கிறது” (1யோவா.5:19). சாத்தானால் கட்டப்பட்டுள்ள, சாத்தானால் ஆளுகைசெய்யப்படும் இந்த உலகத்திற்குள்தான் கடவுள் தன்னுடைய இறையாட்சியை நிறுவவேண்டும் என்று எண்ணி சீடர்களை தேர்ந்தெடுக்கின்றார், அவர்களை அதற்காக தயார் செய்கின்றார், அவர்களுக்கு அந்த தீய சக்திகள்மீது அதிகாரம் வழங்குகின்றார், அவர்களை இந்த உலகத்திற்குள்ளாக அனுப்பி வைக்கின்றார். “தம்மோடு இருக்கவும் நற்செய்தியை பறைசாற்ற அனுப்பப்படவும் பேய்களை ஓட்ட அதிகாரம் கொண்டிருக்கவும் அவர் பன்னிருவரை நியமித்தார்” (மாற்.3:14-15) என்று விவிலியத்தில் வாசிக்கின்றோம். இந்த உலகத்தின் அதிபதியாகிய சாத்தானைக்கண்டு அஞ்சி நடுங்கி அவனுடைய போலியான பொய்யான பிரச்சாரங்களில் வீழ்ந்து நம்மை நாம் இழந்துவிடாமல் காத்து பிறரையும் காக்கவேண்டும் என்பதுதான் ஆண்டவர் இயேசுவின் இதய ஏக்கமாக இருந்தது. எனவேதான் ஜெபத்தின் வல்லமையால் கடவுளோடு கொண்ட உறவில் நிலைத்து, தூய ஆவியினால் ஆட்கொள்ளப்பட்ட இயேசு அலகையின் கொடுமைக்கு உட்பட்டிருந்த அனைவரையும் அவர் விடுவித்து எங்கும் நன்மை செய்து கொண்டே சென்றார் (திபணி.10:38). இந்த உலகத்தின் சக்திகளை உலகத்தின் ஆற்றல்களோடு நாம் ஜெயிக்க முடியாது மாறாக உலகத்தின் போராட்டங்களில் நமக்கு உதவி செய்ய விண்ணகத்தை நாம் துணைக்கு அழைக்கவேண்டும் எனவே தான் நாம் வாசிக்கின்றோம் 2கொரி.10:3-4 “நாங்கள் உலகில்தான் வாழ்கிறோம், எனினும் எங்கள் போராட்டம் உலகைச் சார்ந்தது அல்ல. எங்கள் போராட்டத்தில் நாங்கள் பயன்படுத்தும் கருவிகள் உலகு சார்ந்தவை அல்ல, மாறாக அவை கடவுளின் வல்லமையால் அரண்களைத் தகர்த்தெறியக்கூடியவை.” மேலும் எபே.6:10-11லே வாசிக்கின்றோம் “நீங்கள் ஆண்டவரோடு இணைந்து அவர்தரும் வலிமையினாலும் ஆற்றலாலும் வலுவூட்டப் பெறுங்கள். அலகையின் ஏமாற்று வழிகளை எதிர்த்து நிற்கும் வலிமை பெறும்படி கடவுள் அருளும் எல்லாப் படைக்கலன்களையும் அணிந்து கொள்ளுங்கள்”. இயேசுவே தம் இறப்பிற்குபின்னால் தம் சீடர்களை இறையாட்சிப்பணிக்கு அனுப்புவதற்கு முன்னால், “இதோ என் தந்தை வாக்களித்த வல்லமையை நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்கள் உன்னதத்திலிருந்து வரும் அவ்வல்லமையால் ஆட்கொள்ளப் படும்வரை இந்நகரத்திலேயே இருங்கள்” என்று கூறினார் (லூக்.24:49). எனவே , சாத்தானின் அதிகாரத்தின்கீழ் இருக்கும் இந்த உலகத்தில் சாத்தானை மேற்கொள்ளும் அதிகாரத்தை இறைமகன் இயேசு நமக்கு வழங்கியிருக்கின்றார். அந்த அதிகாரத்தை நாம் தக்கவைத்துக்கொள்ள ஒவ்வொருநாளும் விண்ணகத்தின் துணையை நாடுவோம். ஜெயம் கொண்ட மனிதர்களாக வாழுவோம்.